அனுப்பப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அமைச்சர் அவர்களிடம் நானும் கேட்டு வந்துள்ளேன். ஆகவே, இந்த ஆண்டில் 400 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதிலாவது எங்களுடைய பகுதியை சேர்ந்த புங்கங்குழி கிராமத்தை உள்ளடக்கி அதில் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கிராமம் எனக்கு நன்கு தெரியும். அங்கே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். மிக அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. அந்த கால்நடைகளின் நலத்தை கருத்திற்கொண்டு அந்த கால்நடைகளுக்கு சிகிச்சை தருகிற வகையில் புதிய திட்டத்தை வருகிற மானியக் கோரிக்கையில் அறிவிக்க இருக்கிறேன்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் ஆண்டில் கருத்தில் கொள்கிறேன் என்று சொல்லி விட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியின் நலம் கருதி, அட்லீஸ்ட் பீரியாடிக்கலி ஒரு மொபைல் யூனிட்டாவது வருகிற அளவுக்கு ஏற்பாடு செய்து அங்கேயுள்ள மக்களின் நலனில் அக்கறை கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மாதம் 22ஆம் தேதி வரையில் சற்று பொறுத்திருக்க வேண்டுமாய் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 215, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

215—

இருபது ஹெக்டர் அரசு விதைப் பண்ணைக்கு உதவி வேளாண்மை இயக்குனர் மற்றும் வேளாண்மை அலுவலர் நியமித்தல்.

*11779—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

20 ஹெக்டர் அரசு விதைப் பண்ணைக்கு இரு வேளாண்மை அலுவலர் இருப்பதை மாற்றி ஒரு உதவி வேளாண்மை இயக்குனர் ஒரு வேளாண்மை அலுவலர் என்று பணி அமர்த்திச் செயல்பட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் தமிழ்நாட்டில் இயங்கிவரும் ஒவ்வொரு அரசு விதைப் பண்ணைகளிலும் ஒரு வேளாண்மை அலுவலர் மட்டுமே பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். எனவே ஒரு பண்ணையில் ஒரு வேளாண்மை அலுவலர் மற்றும் ஒரு வேளாண்மை உதவி இயக்குநர் பணியில் அமர்த்த வேண்டியது அவசியமில்லையெனக் கருதப்படுகிறது. மேலும் அரசு நிதியைக் கருத்தில் கொண்டு, தற்பொழுதுள்ள சூழ்நிலையில் வேளாண்மை உதவி இயக்குநர் பணியமர்த்த வாய்ப்பில்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பண்ணைகளில் உற்பத்தியை அதிகப்படுத்தவும், அரசுக்கு அதிகமான வருவாய் ஈட்டவும், விதையின் தரத்தை நிர்ணயிக்கும் வகையில் 'டெக்னிக்கலி குவாலிபைட்' அல்லது 'எக்ஸ்பீரியன்ஸ்ட் அசிஸ்டெண்ட் டைரக்டர்ஸ்' போடுவதன் மூலம் மேற்கண்ட சிறப்புகள் அமையும். ஆதலால் நிர்வாகத்தை மாற்றியமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லுநர் விதையைப் பெருக்கி சான்றிதழ் விதைகளை உருவாக்கித் தருவதற்கு தான் விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அந்த விதைப் பண்ணையை நிர்வகிக்க, வேண்டிய தகுதி படைத்த ஒரு வேளாண்மை அலுவலரே போதும். அவரை வைத்தே அந்தப் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றுள்ள நம்முடைய தமிழகம், காய்கறி உற்பத்தியில் தன்னிறைவு காண காய்கறி தன்னிறைவுத் திட்டம், மேம்பாட்டுத் திட்டம் என்ற சிறப்பான திட்டத்தை செயல்படுத்துவதைப் பாராட்டி, அரசு விதைப் பண்ணைகளில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் அங்கே அதிகமாக இலாபம் ஈட்டும் வகையில் நிகர இலாபத்தில் ஐந்து சதவீதத்தை அங்கே பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு ஊக்கத் தொகையாகக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால் பல்வேறு அரசு பண்ணைகள் நட்டத்தில் இயங்கி வந்தன. நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, அந்தப் பண்ணைகள் சீரமைக்கப்பட்டு

1993 ஏப்ரல் 1]

நல்ல நிர்வாகம் செய்யப்பட்டு, இன்றைக்கு ஓரளவு லாபங்களில் இயங்கி வருகிறது. அந்த லாபத்தை ஈட்டித் தரக்கூடிய சிறந்த பணியாளர்கள்தான் இனி பதவி உயர்வு பெற முடியும் என்றும் அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறது. எனவே, இதுபோன்ற கருத்துக்களை அரசு கனிவோடு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 216, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண். 217, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா எண். 218, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

218—

மருத்துவப் பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிட இன மருத்துவர்களுக்கு மருத்துவமனைக் கட்ட தாட்கோ மூலம் கடன் வழங்கல்.

*9901—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவப் பட்டப்படிப்பு முடித்த ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த மருத்துவர்களுக்குச் சொந்தமாக மருத்துவ மனை கட்டிக் கொள்ள தாட்கோ மூலம் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ், படித்த வேலையல்லாத மருத்துவர்கள் ரூ. 5.00 இலட்சம் வரையில் கடன் பெற்று மருத்துவமனை கட்டிக் கொள்ளலாம். இதில் ரூ. 15,000 தாட்கோ மானியமாகவும், ரூ 85,000 அல்லது திட்ட மதிப்பீட்டில் 20 சதவீதம் இதில் எது குறைவோ அத்தொகை தாட்கோ விளிம்புக் கடன் தொகையாகவும், மீதி வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.